யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

பருத்தித்துறை

பரிசளிப்பு விழாவும்

நிறுவுநர் நினைவு நாளும் - 2015

# வருடாந்த பரிசளிப்பு விழா அறிக்கை

## 2014 / 2015

தலைவர்

செல்வி.G.D.தேவராஜா

(அதிபர்)

பிரதம விருந்தினர்

திருமதி.S.சுந்தரேசன்

(ஓய்வுநிலை அதிபர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

# யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

## வருடாந்த பரிசளிப்பு விழா

**2014/2015**

**தலைவர்**

**செல்வி.G.D.தேவராஜா**

(அதிபர்)

**பிரதம விருந்தினர்**

**திருமதி.செல்வமலர் சுந்தரேசன்**

(ஓய்வுநிலை அதிபர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

# J/Methodist Girls' High School

## ANNUAL PRIZE DAY

**2014/2015**

**PRESIDENT**

**Miss. G.D.Thevarajah**

**(Principal)**

**CHIEF GUEST**

**Mrs. Selvamalar Suntharesan**

**(Rtd. Principal, MGHS)**

# பாடசாலைக்கீதம்

**பல்லவி**

கல்வியன்னை மீதே கவிகள் பாடுவோம்
கலைகள் பல கனிந்து சொரியும் காரணம் கலாசாலை
(கல்வி)

பருத்தித்துறை பெயர் புனையும் பாங்குறு நம் நகரில்
பண்புடன் ஒளிருமன்னை பாதை பேணும் தீபமாம்
(கல்வி)

**சரணம்**

ஓங்கி நல்வளர் உயர்பனை மரமும்
ஒளிதனைப் பரப்பிடும் கலங்கரை விளக்கமும்
உயிர்கள் பல வாழும் கடல் தனையும் கொண்ட
எங்கள் பாடசாலை இன்ப சின்னம் நினைந்து
(கல்வி)

எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தழுவி
நுண்ணிய விஞ்ஞானமும் செந்தமிழ் சங்கீதமும்
மாண்புறுமனையியல் ஓவியம் சரித்திரம்
மகிழ்ச்சியூட்டும் உடற்பயிற்சி மற்றும் கலைதான் கொண்ட
(கல்வி)

பல் சிறார்களும் பாங்குடன் கூடி
பண்ணரிய ஒற்றுமை பூண்டோர் அன்னை சேய்கள் போல்
பொற்சுடராம் நல்லறிவைப் போற்றி நாட்டிற் சேவை செய்ய
பொற்பரனின் பாதமேற்றி வாழ்க என்றும் வாழ்கவே.
(கல்வி)

## SCHOOL SONG

The lamps to light all mankind
From darkness fear and doubt
Lift up to height celestial
and onward towards the light
Gleaming with love and service
Tread we though frail and weak
Onward upward proceed we
Towards the light we seek

# யா/மெதடிஸ்த பெண்கள்உயர்தர பாடசாலை
# பரிசளிப்பு விழா 2014/2015

**வ**ணக்கத்துக்குரிய சமயத் தலைவர்களே, சிறப்புமிகு இப்பரிசளிப்புவிழா மற்றும் நிறுவுநர் நினைவுநாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய எமது பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் அவர்களே, நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்ற வந்திருக்கும் ஓய்வு பெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி. திலகவதி பெரியதம்பி அவர்களே, மதிப்புக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே, கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களே, வலயக் கல்வி அலுவலக உத்தியோகத் தர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, ஓய்வுநிலைக் கல்விசார் அதிகாரிகளே, வருகை தந்திருக்கும் நிறுவனத் தலைவர்களே, பெரியோர்களே, பாடசாலை அபிவிருத்திக் குழு அங்கத்தவர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பாடசாலையின் பிரதி அதிபர் அவர்களே, எமது பாடசாலை ஆசிரியர்களே, எமது பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களே, அன்பான பெற்றோர்களே, என் அன்புக்குரிய மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவரையும் மனங்கனிந்த வணக்கத்தைக் கூறி வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

இற்றைக்கு 192 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை இலங்கையின் வடக்கு முனையில் வடமராட்சிப் பிரதேசத்தில் புகழ் பூத்த பெண்கள் பாடசாலையாகத் தனக்கெனத் தனித் தடம் பதித்து விளங்குகின்றது. எமது பாடசாலையின் பரிசளிப்பு விழா மற்றும் நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வந்திருக்கும் எமது பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் திருமதி. செல்வமலர் சுந்தரேசன் அவர்கள் எமது அழைப்பினை ஏற்று இன்று வருகை தந்தமைக்காக பாடசாலை சமூகம் சார்பாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் எமது பாடசாலையில் அரிவரி முதல் உயர்தர விஞ்ஞான வகுப்பு வரை கற்றுள்ளார். கலைப் பட்டதாரியான இவர், பாடசாலைக் காலத்தில் வகுப்புத் தலைவியாக, மாணவத் தலைவியாக, விளையாட்டு இல்லத் தலைவியாக, சிரேஷ்ட சாரணியாக இருந்தமை அவரது தலைமைத்துவப் பண்பு விருத்திக்கு உதவியாக அமைந்திருக்கும் என நம்புகிறேன். 1973 ஆம் ஆண்டில் சிறந்த சாரணி ஆகத் தெரிவு செய்யப்பட்டு அவ்வாண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் சு.வித்தியானந்தனால் கௌரவிக்கப்பட்டிருந்தார். தனது கல்விப் பணியினை 1984 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் ஆசிரியராக ஆரம்பித்தார். 1993 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி 1997 முதல் எமது பாடசாலைக்கு அதிபராக வரும் வரை அப்பாடசாலையில் உபஅதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

எமது பாடசாலையில் 1997 முதல் 2014 ஏப்ரல் 3 ஆம் திகதி வரை கடந்த 17 வருடங்களாக அதிபராகக் அரும் பெரும் பணியாற்றியுள்ளார். தற்போது தரம் 6 இல் கற்கும் மாணவிகள் தவிர ஏனைய சகல வகுப்பு மாணவிகளும் அவரது நிர்வாகத்தின் கீழ் கற்ற அவரது பிள்ளைகள். அதியுயர் பாதுகாப்பு வலயமாக இப்பாடசாலைப் பிரதேசம் இருந்த மிகவும் நெருக்கடியான காலத்தில் பாடசாலைக்காக

அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. போக்குவரத்து நெருக்கடி, உயிருக்கான அச்சுறுத்தல், பௌதிக வள மற்றும் மனித வளப் பற்றாக்குறை என்பவற்றின் மத்தியிலும் பாடசாலையின் தரத்தை குறையவிடாது, மேலும் அதிகரித்த அவரது சேவை போற்றுதற்குரியது. ஆங்கில மொழி மூலக் கற்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக இவரது காலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. புதிதாக க.பொ.த(உ.த) தொழினுட்பப் பிரிவினை துணிச்சலுடன் ஆரம்பித்த அதிபர் என்ற பெருமைக்குரியவர். பொதுப் பரீட்சை பெறுபேறுகளில் மாத்திரமல்லாது மாகாணமட்டத்திலேயே இணைப்பாடவிதான செயற்பாடுகளில் யாவராலும் புகழப்படும் பாடசாலையாக மாற்றியமைத்த பெருமை அவரையே சாரும். பாடசாலைக்கான பௌதிக வளத்தினை தனது அயராத முயற்சியாலும் மிகுந்த ஆற்றலாலும் பெற்றுத் தந்த அதிபரை பாடசாலை சமூகம் என்றும் நன்றியுடன் நினைவுகூரும். இன்றைய தினத்தில் எமது அழைப்பை ஏற்று இந்நன்நாளில் பிரதம விருந்தினராக வந்திருப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

எமது அழைப்பினை ஏற்று நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்ற வந்திருக்கும் செல்வி.திலகவதி பெரியதம்பியின் வருகை எமக்கு உற்சாகத்தையும் பேருவகையையும் தருகிறது. எமது பாடசாலையின் முதல் விஞ்ஞானப் பட்டதாரியான இவர் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற எமது பாடசாலையின் பழைய மாணவியாவார். யாவராலும் புகழப்பட்ட சிறந்த நிர்வாகியாக செயற்பட்ட இவர் மாணவர்களுக்கு ஒரு சிறந்த மாதிரியும் ஆவார்.

தனித்துவமான வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட மெதடிஸ்த மிசனெறிமாரால் ஆரம்பிக்கப்பட்ட எம் பாடசாலையின் பரிசளிப்பு விழாவானது நிறுவுநர் நினைவு தினமாகிய மெதடிஸ்த தினத்தில் கொண்டாடப்படுகிறது. இலங்கையின் காலித் துறைமுகத்தில் காலடியெடுத்து வைத்த முதல் ஐந்து மெதடிஸ்த மிசனெறிமார்களுள் எமது பாடசாலை ஸ்தாபகர் வணக்கத்துக்குரிய தோமஸ் ஸ்குவான் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இறைபணியுடன் கல்விப் பணியையும் மேற்கொண்டதாக வரலாறுகள் கூறுகின்றன. ஏறத்தாழ 125 ஆண்டுகளாக ஆங்கில பெண்மணிகளின் நிர்வாகத்தின் கீழ் வளர்த்தெடுக்கப்பட்ட எமது பாடசாலையின் முதல் தேசிய அதிபராக யாவரினதும் அன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய செல்வி.றோஸ் மேரி சின்னையா அவர்கள் 1950 ஆம் ஆண்டு முதல் 16 வருடங்கள் அர்ப்பணிப்பான சேவையை ஆற்றியுள்ளார். அவரது சேவை ஒப்பு நிகரற்றது. மிஷனரிமாரின் நிர்வாகத்தின் கீழிருந்த பாடசாலை 1961 இல் அரச பாடசாலையாக சுவீகரிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அரசின் பல்வேறு வேலைத்திட்டங்களின் கீழ் உள்வாங்கப்பட்ட இப்பாடசாலை தற்போது தொழினுட்பத்துறையினையும் உயர் தர வகுப்புக்களில் கற்பிக்கும் 1AB Super பாடசாலையாக உள்ளது.

இப்பாடசாலையானது மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், அரச நிர்வாகிகள், வங்கி முகாமையாளர்கள், ஆசிரியர்கள் போன்ற வாண்மை யாளர்களை வருடந்தோறும் உருவாக்கி வருகிறது.

தேசிய பொதுக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, கல்வியினூடாக விளைதிறனுடைய மனிதவள அபிவிருத்தியை மேம்படுத்துமுகமாக க.பொ.த(உ.த) இல் தொழினுட்பத் துறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சென்ற காலங்களில் நடைமுறையிலுள்ள கல்விமுறையினூடாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கு பிரதான கற்கைத் துறைகள் 3 இருந்தன. இக் கற்கைத் துறைகளுக்கிடையே உயர்தர வகுப்புகளுக்கு அதிகளவிலான மாணவர்கள் பிரவேசிப்பது கலைத்துறையிலேயே ஆகும். வருடாந்தம் பல்கலைக் கழக தொகுதியினூடாக அதிகளவில் உருவாக்கப்படுவதும் வேலை உலகிற்கு தேவைப்படுகின்ற ஆற்றல்களும் திறன்களுமற்ற பெருமளவிலான கலைப் பட்டதாரிகளேயாகும். இப் பெரும் எண்ணிக்கையிலான கலைப் பட்டதாரிகளை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஈடுபடுத்த முடியாதுள்ளது. இதனால் கலைப் பட்டதாரிகளிடையே தோன்றியுள்ள வேலையில்லாப் பிரச்சினை நாட்டுக்குப் பெரும் சுமையாகவுள்ளது. கலைப் பிரிவினுள் பிரவேசிக்கும் மாணவர்களுள் பெரும்பாலானோர் பெண்களாவர். நாட்டில் நிலவும் இந்நிலையை மாற்றியமைக்கும் நோக்கில் புதிய தொழினுட்பவியல் கற்கைத் துறை உயர்தர வகுப்புக்கான நான்காவது கற்கைத் துறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள இளைஞர், யுவதிகளை வேலை உலகின் நவீன சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு முடிகின்ற நவீன தொழில்களில் ஈடுபடுவதற்கு தேவையான தொழினுட்ப அறிவும் அதே போன்று மென்திறன்களும் அத்தியாவசிய தேவையாயுள்ளன.

இலங்கையில் முதலாவது கட்டமாக இத்துறையினைக் கற்பிக்கும் பாடசாலைகளாக 251 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்ட போது எமது பாடசாலைக்கும் இவ் அரிய வாய்ப்புக் கிடைக்கப் பெற்றுள்ளமை பெரும் பாக்கியமென்று கருதுகிறேன். இதனால் தொழினுட்ப பீடம் என்னும் மூன்று மாடிக் கட்டிடம் கல்வி அமைச்சினால் எமது பாடசாலைக்கு கட்டித் தரப்படுகிறது.

இத்துறை 2013 முதல் எமது பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு, இம்முறை முதற் தடவையாக 20 மாணவிகள் உயிர்முறைமைத் தொழினுட்பப் பிரிவிலிருந்தும் 17 மாணவிகள் பொறியியல் தொழினுட்பத் பிரிவிலிருந்தும் க.பொ.த(உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

தொழினுட்ப ஆய்வுகூடம் கட்டி தரப்பட்டு மாணவர் பாவனைக்கென இவ்வருடம் மாசி மாதம் 26 ஆந் திகதி கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ வே.இராதாகிருஸ்ணன் அவர்களால் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் எமது பாடசாலை பழைய மாணவனும் ஜேர்மன் நாட்டின் ஹம்பேர்க் மாநில செனட் உறுப்பினருமான திரு.அயன் கிருகரனினால் கட்டித் தரப்பட்ட சிற்றுண்டிச்சாலையும்

மாணவர் கற்றல் மண்டபமும் கடந்த வருடம் மார்கழி மாதம் 3ஆந் திகதி வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர். திரு.சி.சத்தியசீலன் அவர்களால் பாடசாலையிடம் கையளிக்கப்பட்டது.

பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளைப் பொறுத்தவரை எமது பாடசாலை க.பொ.த(சா.த) மற்றும் உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றினை தொடர்ந்தும் பெற்று வருகிறது. கல்வியில் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்த பெறுபேறுகளைத் தொடர்ந்து பெற்று வருகிறது. பெரு விளையாட்டுகளில் சென்ற வருடம் 11 அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றியதுடன் 15 வயதுக்குட்பட்ட கபடி அணியினர் தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் மாகாண மட்டத்தில் நடைபெற்ற வர்ண இரவுகள் நிகழ்வின் போது எமது பாடசாலை விருது பெற்றதுமட்டுமல்லாமல் வடமராட்சி கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட வர்ண இரவுகள் நிகழ்வின் போது விசேட விருதினைப் பெற்று கௌரவிக்கப்பட்டமையை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். உடற்கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர் மட்டுமல்லாது மற்றைய ஆசிரியர்களும் பாடசாலை நேரத்துக்குப் புறம்பாக மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சியினை வழங்கி கடின உழைப்புடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றுகின்றமை மனதாரப் போற்றத்தக்க விடயமாகும். பாடசாலைக்குக் கிடைக்கும் வெற்றிகளுக்கும் விருதுகளுக்கும் ஆசிரியர்களது அர்ப்பணிப்பே காரணமென்றால் அது மிகையாகாது.

பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு பாடசாலை முகாமைத்துவக் குழுவினரும் சகல ஆசிரியர்களும் பெரும் பங்காற்றி வருகின்றனர். ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவை பாடசாலை சமூகத்தால் பெரிதும் பாராட்டப்படுகிறது.

பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் பாடசாலையின் செயற்பாடுகளில் அதிக அக்கறையுடன் ஆலோசனை வழங்குவது மாத்திரமல்லாது பல்வேறு வழிகளில் உதவிகளையும் வழங்கி வருகின்றனர். கட்டிடத் திருத்தம், வாகனப் பராமரிப்பு, மதிய உணவு வழங்கல், பாடசாலைமட்டத் திட்டமிடல் போன்ற பணிகளில் உதவுவதோடு மாத்திரமல்லாது தொழினுட்ப ஆய்வுகூடத்திறப்பு விழாவின் போது மதிய உணவிற்கான செலவீனத்தை தாமே வழங்கியும் உள்ளனர். பாடசாலை நலனுக்காகவும், மாணவர்களுக்காகவும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு மிக்க ஒத்துழைப்பு வழங்கும் அவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

பாடசாலையின் பௌதிக வளங்களைப் பொறுத்தவரையில், எமது பாடசாலையில் கடந்த 17 ஆண்டுகளாக அரும்பணியாற்றிய இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினர் அவர்கள் தமது சாமர்த்தியத்தாலும் விடாமுயற்சியாலும் பாடசாலைக்கான பஸ், ஓட்டோ, பாடசாலைக்கான சிற்றுண்டிச்சாலை, இவ் ஒன்றுகூடல் மண்டபம் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதில் அரும் பங்காற்றியுள்ளார். இவை மாத்திரமன்றி அவர் பெற்றுக் கொடுத்த வளங்கள் மேலும் பல உள்ளன.

கல்வி அமைச்சினால் பெற்றுத் தரப்பட்ட தொழினுட்ப ஆய்வுகூடம் மாணவர்களால் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. விஞ்ஞான ஆய்வுகூடத்துக்கான இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் போதியளவு இல்லாதிருந்த போதிலும் கல்வி அமைச்சிலிருந்து ஒரு தொகுதி பொருட்கள் பெறப்பட்டு விஞ்ஞான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் கனடா பழைய மாணவர் சங்கத்திடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்தும் ஆய்வுகூடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகிறது. நூலகத்திற்கான இணையவசதி ஏற்படுத்தப்பட்டிருப்பது ஆசிரியரதும் மாணவரதும் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கிற்கு உதவியாக உள்ளது. மேலும் லண்டன் பழைய மாணவர் சங்கம் நூலக விருத்திக்கும் பராமரிப்புக்கும் உதவி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். லண்டன் பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் பெயரில் நிலையான வைப்பினை ஏற்படுத்தி அதன் வட்டிப்பணம் மூலம் நூலக அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிற்றுண்டிச்சாலைக்கான தளபாடக் கொள்வனவுக்கென அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்கம் நிதி உதவி வழங்கியுள்ளது. மேலும் கனடா பழைய மாணவர் புதிதாக அமைக்கப்பட்ட கற்றல் கூடத்துக்கான தளபாடக் கொள்வனவுக்கென நிதி உதவி செய்துள்ளதுடன் பாடசாலை நுழைவாயில் கேற் திருத்தச் செலவினையும் பொறுப்பேற்றுள்ளது. கனடா பழைய மாணவர் சங்கம், கொழும்பு பழைய மாணவர் சங்கம் என்பன ஏற்படுத்தித் தந்திருக்கும் நிலையான வைப்புக்களின் வட்டிப் பணத்தின் குறித்த சதவீமானது இப்பரிசளிப்பு விழா இனிதே நடத்தப்பட உதவியாக உள்ளது.

மேலும் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு நிதியத்தின் நிலையான வைப்பு தேவையுள்ள மாணவர்களிற்கு காலை உணவு மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொடுக்க உதவுகிறது. நிலையான வைப்புக்களின் வட்டிப் பணத்தின் மூலம் இப்பரிசளிப்பு விழாவின் ஞாபகார்த்தப்பரிசில்கள் அவற்றை வழங்கியோர் குறிப்பிட்ட ஆவணங்களிலுள்ளபடி மாணவர்களுக்கு முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு வழங்கப்படுகிறன.

பழைய மாணவர் தாய்ச் சங்கத்தினர் பகல் நேரக் காவலாளி சம்பளம், அலுவலக உதவியாளர் சம்பளம், மேலதிக மின்கட்டணம் என்பவற்றை வழங்கி பாடசாலையின் தேவைகளை பூர்த்திசெய்து வருகின்றனர். இவ்விடத்தில் பாடசாலையின் தேவைகளை முன்வைக்கும் போதெல்லாம் அவற்றை ஆராய்ந்து மனமுவந்து தேவைகளை நிறைவேற்றிவரும் வரும் தாய்ச்சங்கம், கொழும்பு, அவுஸ்திரேலியா, லண்டன் மற்றும் கனடா பழைய மாணவர் சங்கங்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும் அலுவலக உத்தியோகத்தர்களும் கல்வி பண்புத் தர விருத்தி செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்கி வருகின்றனர். வலயமட்ட வெளிவாரி மதிப்பீடு, உலக வங்கி அதிகாரிகளின் தரிசிப்பு என்பன மேலும் பாடசாலையை தனது இலக்கு நோக்கி முன்னேற உதவுகின்றன. இவ்வருட TSEP நிதி மூலம் எமது பாடசாலையின் கட்டிடத்திருத்தத்திற்கு 1.5 மில்லியன் நிதி

ஒதுக்கீடு கிடைத்துள்ளது. மேலும் உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் கட்டித் தரப்பட்ட சமையலறையினை பயன்படுத்தக்கூடியவாறு மாற்றியமைப்பதற்கும் திறந்தவெளி மேடையின் முன்புறத்தை சீர் செய்வதற்கும் வலயக் கல்வி அலுவலகம் நிதியை ஒதுக்கித் தந்துள்ளது. பாடசாலைக் கற்றல் மேம்பாட்டு நிதி, பாடசாலை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு மானியம், தர உள்ளீட்டு நிதி என்பவை மாணவரின் கற்றல் மேம்பாட்டுக்காக வினைத்திறனுடன் வலயக் கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டல்களுக்கமைய பயன்படுத்தப்படுகிறது.

இவ்வேளையில் போதிய மனித ஆளணியினரையும் இயன்றளவு பௌதிக வளத்தினையும் வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எனது நன்றிகளைத் தெரித்துக் கொள்கின்றேன். வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் சகல கல்வி செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு முதலீடு செய்யப்படும் நிதி மற்றும் மனித வளத்தினை உச்சளவில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவது பாடசாலையின் தலையாய பொறுப்பாகும்.

ஆரோக்கியமான அறிவுசார் சமுதாயத்தை உருவாக்குதற்கு வேண்டிய சகல வழிப்படுத்தல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்கி நெறிப்படுத்தும் மாகாணக் கல்விப்பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவில் பரிசில்களைப் பெறும் சகல மாணவிகளையும் பாராட்டி என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்து ஏனைய மாணவிகளும் நன்கு கற்று அடுத்து வரும் காலங்களில் பரிசில்களைப் பெற வாழ்த்துகிறேன் கல்வியில் மாத்திரமல்லாது ஒழுக்கம், நற்பண்புகள் என்பவற்றிலும் சிறப்புற்று தேசத்தின் நற்பிரஜைகளாக வளர்ந்து வர என்னுடைய ஆசிகளைக் கூறிக் கொள்கிறேன். பாடசாலை மாதாவை என்றும் மதித்து பார்போற்றும் வண்ணம் சிறந்த மாதிரிகளாக வாழ வாழ்த்துக்கள்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து ஆசிச் செய்தி வழங்கிய மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை - கட்டைவேலி முகாமைக் குரு அவர்களுக்கும் இந்து சமய தலைவர் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். நேர விரயத்தைக் கருத்திற் கொண்டு முக்கிய விடயங்கள் அறிக்கையில் இணைப்பாகத் தரப்பட்டுள்ளது. எமது அழைப்பை ஏற்று வருகை தந்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்து எனது அறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

# Management of the School

**Total Students**

| | | |
|---|---|---|
| Grade | 6-11 | 779 |
| Grade | 12-13 | 505 |
| | Total | 1284 |

**Strength of Teachers**

| | |
|---|---|
| Graduates | 40 |
| Trained | 23 |
| Untrained | 01 |
| Non Academic Staff | 04 |

**Staff Needed**

**Non Academic staff**

Sanitary Labourer

Lab Assistant

## Details of Retired Principal & Teachers - 2014

Mrs.S.Suntharesan(Principal)

Mrs.R.Anantharajah(Sectional Head)

## Details of Transferred Teachers in 2014

1. Mrs.S.Sivaganesan
2. Mrs.S.Senthuran
3. Mr.K.Mugunthan
4. Ms.K.Jeyasothy

## Newly Joined Principal in 2014

Miss.G.D.Thevarajah

## Details of Newly Joined Teachers in 2014

1. Mr.R.Pirabosankar
2. Mrs.V.Arulanantham
3. Mrs.A.Suntharamoorthy
4. Mr.B.Gobithas
5. Miss.S.Sooriyamoorthy
6. Mr.V.Manivarman
7. Mrs.G.Sivasithamparam
8. Miss.S.Chinnaiah
9. Mrs.V.Kumaresamoorthy
10. Mrs.T.Jeyakanthan
11. Miss.S.Balasaraswathy
12. Miss.P.Kumarasuvamy

## Associations & Teacher In charge

| Associations /Clubs | Teacher In charge |
|---|---|
| 1. Hindu Union | Mrs.R.Sriragavan |
| 2. Christian Union | Mrs.A.V.Uthayakumar |
| 3. English Union | Mrs.V.Chithiravadivel |

| | |
|---|---|
| 4. Tamil Union | Mr.P.Rathees |
| 5. Advanced Level Students' Union | Mrs. T .Jeyakanthan |
| 6. Games & Athletic Association | Mrs. R. Sivathasan |
| 7. Science & Maths Association | Mrs. S. Sivalingam |
| 8. Social Science Association | Miss. S. Chinnaiah |
| 9. Disaster Management Association | Miss. Y .Rathakrishnan |
| 10. Environmental Club | Mrs. T. Satkunaraja |
| 11. Information Communication Technology Club | Miss. K. Ponnuththurai |
| 12. Commerce Association | Mrs. J. Thayanithy |
| 13. Students Health Club | Mrs. M. Selvakumar |
| 14. Aesthetic Association | Miss. K. Theivanayagam |
| 15. Girl Guide's Association | Miss. K. Theivanayagam |
| 16. St.Johns' Ambulance | Mrs. A. Sundaramoorthy |

## PRIZE WINNERS - SUBJECTWISE (2014)

### Grade 6

| | |
|---|---|
| 1. Suthaharan Nitharsha | Maths |
| 2. Pushpakaran Tiluxiga | Tamil, Science |
| 3. Lakkunarajah Haripriya | Saivaism |
| 4. Thevasakayantahan Mary Dilsiya | Roman Catholicism |
| 5. Wesley Prashanth Sabeena | Christianity |
| 6. Rajeswaran Nishani | History |
| 7. Suneethan Hamshika | English |
| 8. Jeganathan Kanalaki | Geography, Life Skill &Citizenship Education |
| 9. Kailashanathan Piruthuvi | Dance |
| 10.Kathirgamanathan Sayani | Music, Practical & Technical Skill |
| 11.Mohanarajah Inthu | Art |
| 12.Wadsan Sahithya | Health & Physical Education |

### Grade 7

| | |
|---|---|
| 1. Rajakuru Mathumai | Maths |
| 2. Elanko Thulasika | Science, Health & Physical Education |
| 3. Athiyaman Sowmiya | Saivaism |
| 4. Anton Uthayakumar Sharoni<br>Justin Croos Mary Luxsika | Roman Catholicism |
| 5. Mathanamohan Reshina | Christianity |
| 6. Manorajah Abinaiyaah | Tamil |
| 7. Jegatheeswaran Parkavi | History |
| 8. Antony Thevarajah Divya | English |
| 9. Nithiyaraj Vithurshana | Geography,<br>Life Skill & Citizenship Education, Art |
| 10. Sukumaran Karunya | Dance |
| 11. Jeyarajah Sharmini | Practical & Technical Skill |
| 12. Rajeswaran Sujani | Music |

## Grade 8

| | | |
|---|---|---|
| 1. | Poopalasingam Nirusha | Maths, Science, Saivaism, Tamil, History, Geography, Dance, Health & Physical Education, Life Skill & Citizenship Education, Practical & Technical Skill |
| 2. | Aldan Priyatharsha | Roman Catholicism |
| 3. | Satkunaraja Tanarani | Christianity |
| 4. | Indralingam Shakiththiya | English |
| 5. | VeeramaniIyar Vaishnavi | Music |
| 6. | Sivakumaran Sivapriya | Art |

## Grade 9

| | | |
|---|---|---|
| 1. | Krishnaramasundaram Keshika | Maths, History |
| 2. | Neshanathan Sharmini | Health& Physical Education, Music |
| 3. | Poobalasingam Geethanjali | Saivaism |
| 4. | Jesurasa Thayanithi | Roman Catholicism |
| 5. | Dusyanthan Deborajoy | Christianity |
| 6. | Jeyachandra Lishalini | Tamil, Practical & Technical Skill |
| 7. | Thiraviarasa Asmitha | Dance |
| 8. | Yogeswaran Tharsiga | Art |
| 9. | Puvaneswaran Sumiththa | Life Skill & Citizenship Education |
| 10. | Puvanenthiran Viththaki | Science, Maths |
| 11. | Yogendran Shambavi | Geography, English |

## Grade 10

| | | |
|---|---|---|
| 1. | Pragalathan Ashiga | Maths, Saivaism, Music, Commerce |
| 2. | Sivabalan Kosala | Science, Tamil, History, English, Health& Physical Education |
| 3. | Arasaratnam Robisha | Roman Catholicism |
| 4. | Arulanantharajah Mathumitha | Christianity |
| 5. | Murugathas Vithya | Geography, Tamil Literature |
| 6. | Pushparaja Pukalini | Dance |
| 7. | MahendraThilaka Mathura | Civics |
| 8. | Chandrabalan Keerthana | Home Economics |
| 9. | Ravikumar Narmika | ICT |
| 10. | Kuganeshan Nithusha | English Literature |

## Grade 11

| | | |
|---|---|---|
| 1. | Theysomajanantham Sankavi | Maths, Saivaism, Commerce |
| 2. | Kumukkesan Mathumai | Science, English |
| 3. | Ramakrishnan Thamilarasi | Tamil, Music |
| 4. | Jeganathan Nishoba | History, Civics |
| 5. | Puvitharan Yasotha<br>Selvanayakam Shajira | Dance |
| 6. | Shanmuganathan Saraniya | Art |
| 7. | Sivapalan Sinthuja | Geography |
| 8. | Ananthamoorththy Sangeetha<br>Shanmugavaseekaran Diluxsana | ICT |
| 9. | Kugendran Keerthiga | Health & Physical Education |
| 10. | Baskaran Sowmiya | English Literature |
| 11. | Ponnuthurai Thusitha | Tamil Literature |

## Grade 12 Science Stream

| | | |
|---|---|---|
| 1. | Jastiha Ragunathan | Biology |
| 2. | Jeyaluxmy Sivalingam | Chemistry |
| 3. | Lavanja Loganathan | Combined Maths, Physics |

## Grade 12 Technology Stream

| | | |
|---|---|---|
| 1. | Luxmy Thayaparan | Science for Technology |
| 2. | Theiventhiny Rajenthiran | Engineering Technology, Economics |
| 3. | Manchika Inparasha | Bio System Technology , ICT |
| 4. | Ketharagowry Savunthararajan | Accounts |
| 5. | Kirushanthi Inthiralingam | Geography |
| 6. | Gayathiri Theivendran | Agriculture |

## Grade 12 Commerce Stream

| | | |
|---|---|---|
| 1. | Majurija Murugeswaran | Business Studies |
| 2. | Kanya Ravinthiran | Accounts, Economics |

## Grade 12Arts Stream

| | | |
|---|---|---|
| 1. | Nishanthy Ravichchanthiran | Tamil |
| 2. | Thavathurai Vivekanantharasa | Logic |
| 3. | Vinothini Sivapalan | Political Science |
| 4. | Logini Jeyakanthan | Geography, Hindu Civilization |
| 5. | Keerthiga Ragunathan | Christianity |
| 6. | Karthigajini Karthigesu | Dance |

## Grade 13 Technology Stream

| | | |
|---|---|---|
| 1. | Tharsika Muththulingam | Science for Technology, Bio System Technology, ICT |
| 2. | Sobana Vincendipaul | Engineering Technology |
| 3. | Nisharuja Theivendrarajah | Accounts |
| 4. | Sobiya Vincendipaul | Geography |
| 5. | Lakanika Vinayagamoorthy | Agriculture |

## Grade 13 Commerce Stream

| | | |
|---|---|---|
| 1. | Sinthurani Chelvarajah | Business Studies, Economics |
| 2. | Keerthika Vigneswararasa | Accounts |

## Grade 13 Arts Stream

| | | |
|---|---|---|
| 1. | Kokilavathana Rathakrishnan | Tamil, Logic, Political Science |
| 2. | Suganya Navaneethan | Geography, Hindu Civilization |
| 3. | Sinthuja Sivasithambaram | Music |
| 4. | Poongothai Julius Rubendran | Christianity |

## First Ranked Prize Winners – ClassWise

| | | | |
|---|---|---|---|
| Grade 6 | K.Piruthuvi | Grade 12 Maths | L.Lavanya |
| Grade 7 | E.Thulasika | Grade 12Bio | R.Jasitha |
| Grade 8 | P.Nirusha | Grade 12Com | R.Kanga |
| Grade 9 | J.Lishalini | Grade 12Arts | K.Karthigajini |
| Grade 10 | S.Kosala | Grade 12Tech | Thiventhini |
| Grade 11 | S.Sinthuja | Grade 13 Maths | V.Kobika |
| | | Grade 13Bio | B.Eluxana |
| | | Grade 13Com | C.Sinthurani |
| | | Grade 13Arts | R.Kokilavathana |
| | | Grade 13Tech | M.Tharsika |

## General Knowledge

| | |
|---|---|
| Grade 6 | Sokkanathan Kovarthany, Chandrakumar Abishiga |
| Grade 7 | Mathumitha Kugenthirasarma |
| 8 | Sowmiya Athigaman |
| 10 | Keshika Krishnaramasundaram |
| 11 | Sivakalai Kaneshamoorthy |
| 12 | Manchika Inparasa |
| 13 | Olinila Sangar |

## Handicraft Prize Winners - School Level

### Grade 6 (2015)

1. Adsaya Sivasubramaiyam
2. Thanoya Jeyaseelan
3. Hamshathvani Athavan
4. Hamshiga Kanesvaran
5. Surenthini Sureskumar

## Creative Activity

### Grade 6 (2015)

1. Jois Nixshala Ariyaranjan
2. Premina Rasakumar
2. Kabiska Uthayaseelan

## G.C.E(A/L) Result – 2014

### Maths

| | | |
|---|---|---|
| 1. | Satkurunathan Jaseetha | 2A B |
| 2. | Thevarasa Thagsha | A 2B |
| 3. | Sivakumaran Vahiny | 2A C |
| 4. | Sooriyakumar Suthesana | A B C |

### Commerce

| | | |
|---|---|---|
| 1. | Sabanathasharma Iyswarya | A 2B |
| 2. | Alagarajah Jeyavathana | A 2B |

### Science

| | | |
|---|---|---|
| 1. | Vaithilingam Akalya | A 2B |
| 2. | Selvalingam Sajitha | A 2B |
| 3. | Shanmugeswaran Abinaya | A B C |
| 4. | Kalaichelvan Arthika | A B C |
| 5. | Thavakularatnam Venuja | A B C |
| 6. | Thangaraja Vithusana | A B C |
| 7. | Arulanantham Anojah | A 2C |

### Arts

| | | |
|---|---|---|
| 1. | Navanesan Karunya | 2A B |
| 2. | Kumaresan Gobika | 2A C |
| 3. | Thirumal Jenany | 2A C |
| 4. | Arasaratnam Keerthika | 2A S |

## G.C.E(O/L) Result (2014)

**9A – English Medium**

1. Thusyanthi Kuganathan

**9A – Tamil Medium**

1. Thusitha Ponnuthurai
2. Sinthuja Sivabalan
3. Sankavi Thesomajananthami

**8A – English Medium**

1. Sowmiya Baskaran
2. Thulasika Puvanenthiran
3. Niruja Srikantharasa
4. Diluxsana Sanmukavasekaran
5. Sangeetha Ananthamoorththy
6. Mathumai Kumukkesan

**8A – Tamil Medium**

1. Vaitheki Sivalingam
2. Sathursha Raseenthirarasa

**7A – English Medium**

1. Abinaya Prabakaran

**7A – Tamil Medium**

1. Thamilarasy Ramakrishnan
2. Sharmini Premaratnam
3. Sivani Sivakumar
4. Nishoba Jekanathan

**6A – Tamil Medium**

1. Barathy Balachandran
2. Priyanca Thangeswaran
3. Kiruthika Thayanithy

**5A – Tamil Medium**

1. Suganthini Gobalakrishnan
2. Mathusha Pathmanathan
3. Nilushana Gobalakrishnar
4. Abitharani Jeyachandran
5. Keerthika Kugenthiran

# Sports Competition 2014

## MAJOR GAMES

| Games | Age group | Zonal | District | Provincial | National |
|---|---|---|---|---|---|
| Net ball | Under 15 | 1st | 3rd | 1st | Participated |
| | Under 17 | 1st | 3rd | 2nd | Participated |
| | Under 19 | 2nd | | - | - |
| Volley ball | Under 15 | 3rd | - | - | - |
| | Under 17 | 1st | 3rd | 3rd | Participated |
| | Under 19 | 1st | 1st | 1st | Participated |
| Cricket | Under 19 | 1st | - | - | - |
| Elle | Under 19 | 2nd | - | - | - |
| Chess | Under 15 | 2nd | - | 2nd | Participated |
| | Under 19 | 1st | - | 1st | Participated |
| Kabady | Under 15 | 1st | 1st | 3rd | 3rd |
| | Under 19 | 1st | 2nd | 2nd | Participated |
| Badminton | Under 15 | 1st | - | 2nd | Participated |
| | Under 19 | 1st | - | 3rd | Participated |
| Table Tennis | Under 15 | 1st | 1st | 1st | Participated |
| | Under 19 | 1st | 1st | - | - |
| **Athletic – 2014** | | | | | |
| 100m Hurdle VaishnaviAnantharaja | Under 15 | 1st | - | 4th | Participated |
| Discus Vithushana Thangaraja | Under 21 | 1st | - | 3rd | Participated |

# Name of Team Members Participated in National Level Major Games

## Net Ball

**Un – 15**

1. Kirushnaramasuntharam Kesika
2. Anantharaja Vaishnavi
3. Mathiyalagan Mathinila
4. Kugan Keerthiga
5. Murugathas Priyanga
6. Srirangan Pranavi
7. Mugunthan Araby
8. Rameshkumar Amsha
9. Thayakaran Tharani
10. Sivakumaran Sivapriya

**Un – 17**

1. Nakenthiram Vinuya
2. Kamalanathan Shahiththiya
3. Aingarathas Vijinthika
4. Sivapalan Yutharsini
5. Uthajakumar Gowsiga
6. Loganathan Banusha
7. Karthigesu Arththika
8. Srikantharasa Jasmini
9. Mahenthirathilakka Mathura
10. Manoranjan Anusiya

## Volley Ball

**Un – 17**

1. Kamalanathan Shahiththiya
2. Alfred Rebecca
3. Murugathas Thanuja
4. Balaenthirathas Arunciya
5. Jeyanathan Mathura
6. Parameswaran Pavithra
7. Sivalingam Vaitheki
8. Logaraja Thanusiya
9. Kobalakrishnar Nilusana
10. Selvaratnam Gowshalya

**Un – 19**

1. Sakthivel Rohini
2. Vijayakumar Janani
3. Paramalingam Kapila
4. Rasenthiram Theepana
5. Kunanayagam Sampavi
6. Balakrishnan Keerthika
7. Sivarajah Jeyanthika
8. Mahatheven Niththika

## Kabady

**Un – 15**

1. Arulanantharaja Mathumitha
2. Sivarasa Dilakshana
3. Arumugam Sukanya
4. Sivarasa Dithursana
5. Sivarasa Siyamini
6. Thaneshwaran Vaishnavi
7. Tharmenthiran Esaipiriya
8. Muththulingam Yalini
9. Arunthavarasa Gobitha
10. Santhiralingam Nishajini
11. Selvarasa Rammiya
12. Sivarasa Vaishnavi

## Kabady

**Un – 19**

1. Anton Jarald Helanthayalini
2. Sivaneshan Kayaththiri
3. Kurugulasingam Nithusha
4. Srikanthan Saranka
5. Balasundaram Dishany
6. Sivanantham Kayathiri
7. Selvarasa Luxshana
8. Pavaneswaran Jathunitha
9. Sriramachandran Shakithiya
10. Vigneswararasa Subanki
11. Pavanantharasa Ajiththa
12. Ravichchandran Meera

## Badminton

**Un – 15**

1. Thevarajenthiran Pavithra
2. Manikavasagan Saruja
3. Ciththiravadivel Hethuja
4. Rajanikanth Rakavi
5. Kugathas Prashanthi
6. Sivalingam Lakshana
7. Pavalanathan Nathusiya

**Un – 19**

1. Thillairasa Kayaththiri
2. Jeyasri Rajeevini
3. Murugathas Viveka
4. Sriskantharasa Sakinthana
5. Sivarasa Shamini
6. Sivakumar Jathusha
7. Vijayakumar Kayalini

## Table Tennis

**Un – 15**

1. Mahilrajan Mathumitha
2. Thiraviyarasa Asmitha
3. Poopalasingam Keethanjali
4. Neshanathan Sarmini
5. Karunakaran Jeyatharsana

## Chess

**Un – 15**

1. Inthiralingam Shakithiya
2. Peetar Jeyaseelan Jothini
3. Vallipuranathan Thusaraka
4. Puvanenthirarasa Adshaya
5. Kuganathan Mathanki
6. Ilangesvaran Ragini
7. Athavan Athiththiya

**Un – 19**

1. Rasanajagam Thiventhini
2. Sooriyamoorthy Puviththa
3. Kumukkeshan Mathumai
4. Thevasakajam Mayoori
5. Loganathan Lavanja
6. Puvanenthiran Thulasika

# Tamil Day Competition – 2014

## Zonal Level

| Event | Division | Name of student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|---|
| Reading | 2 | Abinaya Manoraj | ✓ | | |
| Speech | 2 | Sharmini Jeyaraja | ✓ | | |
| Speech | 4 | Sowmiya Baskaran | | ✓ | |
| Story writing | 5 | Thushanthi Suthakar | | | ✓ |
| Grammar | 4 | Mathumai Kumukkesan | | | ✓ |
| Creative writing | 5 | Sakismana Sivachandrabos | ✓ | | |
| Role play writing | 5 | Maryconsy Neaton nihal | ✓ | | |
| Quiz | II | | | ✓ | |
| Group singing | II | | | ✓ | |
| Group singing | III | | | | ✓ |
| Dance | II | Gayaththiri Sivaraja | | ✓ | |
| Dance | III | Asmitha Thiraviyaraja | | | ✓ |
| Balle Dance | | | | ✓ | |
| Music | III | | | | ✓ |
| Group Dance | II | | | ✓ | |

## Provincial Level

Reading II Abinaya Manoraj - 2nd Place

# English Day Competition – 2014

## Zonal Level

| Event | Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|---|
| Copy writing | 9 | S.Nilani | | ✓ | |
| | 10 | R.Duxshika | ✓ | | |
| | 10 | P.Vaishnavi | | ✓ | |
| | 11 | T.Sankavi | | ✓ | |
| | 12 | S.Sujeeva | | ✓ | |
| Cursive | 13 | T.Nisharuja | ✓ | | |
| Writing | 13 | R.Jelani | | | ✓ |
| Dictation | 6 | R.Nishani | ✓ | | |
| | 6 | V.Kaviya | | | ✓ |
| | 7 | K.Abinaya | ✓ | | |
| | 7 | J.Sharmini | | ✓ | |
| | 9 | K.Thivya | ✓ | | |
| | 10 | K.Nithusha | | ✓ | |
| | 11 | K.Mathumai | ✓ | | |
| | 12 | S.Puvitha | | ✓ | |
| | 13 | B.Eluxana | | ✓ | |
| | 13 | S.Rohini | | | ✓ |
| Creative writing | 7 | S.Abinaya | ✓ | | |
| | 13 | B.Eluxana | ✓ | | |
| Recitation | 9 | Y.Sambavi | ✓ | | |
| Oratory | 12 | B.Arani | ✓ | | |
| Prepared | 12 | T.Luxmy | | ✓ | |
| Oratory [1] | 13 | B.Eluxana | | | ✓ |
| Story Telling | 6 | V.Vaitheki | | | ✓ |
| | 7 | M.Abinaya | ✓ | | |
| | 8 | V.Vaishnavi | | | ✓ |
| | 9 | Y.Sambavi | ✓ | | |
| News Reading | 13 | R.Sarmila | | ✓ | |

| Event | Grade | | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|---|
| Group Events | | Junior Song | | ✓ | |
| | | Senior Song | | ✓ | |
| | | Debate | | | ✓ |
| | | Junior Drama | | ✓ | |
| | 6 | Role play | | | ✓ |
| | 7 | Role play | | ✓ | |
| | 8 | Role play | ✓ | | |
| | 9 | Role play | | ✓ | |
| | 10 | Role play | ✓ | | |
| | 11 | Role play | | | ✓ |
| | | **Provincial Level** | | | |
| Copy writing | 11 | T.Sankavi | ✓ | | |
| Dictation | 7 | K.Abinaya | | ✓ | |
| | | J.Sarmini | ✓ | | |
| | | K.Nithusha | | ✓ | |
| | | K.Mathumai | | | ✓ |

## Science Quiz Competition - 2014

### Zonal Level

#### Tamil Medium

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 7 | Sivakadachcham Sivanika | | | ✓ |
| 8 | Poobalasingam Nirusha | | | ✓ |
| 10 | Sivabalan Kosala | ✓ | | |

#### English Medium

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 6 | Rajeswaran Nishani | ✓ | | |
| 7 | Jeyarajah Sharmini | | ✓ | |
| 7 | Rajakuru Mathumai | | | ✓ |
| 9 | Puvanenthiran Viththaki | | | ✓ |
| 11 | Kumukkesan Mathumai | ✓ | | |
| 11 | Puvanendran Thulasika | | | ✓ |

**Provincial Level**

**Tamil Medium**

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 10 | Sivabalan Kosala | ✓ | | |

**English Medium**

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 7 | Jeyarajah Sharmini | | ✓ | |
| 11 | Kumukkesan Mathumai | | ✓ | |

## Maths Quiz Competition – 2014

**Zonal Level**

**Tamil Medium**

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 10 | Pirakalathan Asika | ✓ | | |

**English Medium**

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 6 | Suntharalingam Abira | | ✓ | |
| 7 | Jeyatheeswaran Bharkavi | ✓ | | |
| 10 | Premakanthan Bavanika | | | ✓ |
| 11 | Anandamoorthy Sankeetha | | ✓ | |

**Provincial Level**

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 7 | Jeyatheeswaran Bharkavi | | ✓ | |
| 10 | Pirakalathan Asika | | ✓ | |

# ICT Competition – 2014

## Zonal Level

| Event | Group | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|---|
| Flash | I | S.Abinaya | ✓ | | |
| | | S.Mathumai | ✓ | | |
| | | K.Dilaxika | ✓ | | |
| | II | M.Bhavatharani | | ✓ | |
| | | S.Janani | | ✓ | |
| | | P.Pugalini | | ✓ | |
| Visual Basic | I | J.Abitharani | | | ✓ |
| | | G.Suganthini | | | ✓ |
| | | P.Yasotha | | | ✓ |

# Social Science Quiz Competition – 2014

## Zonal Level

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 8 | P. Nirusha | ✓ | | |
| 10 | S. Kosala | ✓ | | |
| 11 | I. Thamilarasi | | | ✓ |
| 12 | P.Nirojini | | ✓ | |

## Provincial Level

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 10 | S. Kosala | ✓ | | |

## National Level

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd | 4th |
|---|---|---|---|---|---|
| 10 | S. Kosala | | | | ✓ |

# Commerce Competition - 2014

## Zonal Level

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 10 | P.Asika | ✓ | | |
| 11 | I. Thamilarasi | ✓ | | |
| 12 | K.Nirosini | | ✓ | |

# Disaster Management Competition – 2014

## Zonal Level

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 10 | M.Mathusha | ✓ | | |

## Provincial Level

| Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| 10 | M.Mathusha | ✓ | | |

# Second Language – Sinhala Competition – 2014

## Zonal Level

| Event | Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|---|
| Reading | 7 | Senthan Bhairavi | ✓ | | |
| | 7 | Arumuganathan Balamathusha | | ✓ | |
| | 8 | Veeramani Iyer Vaishnavi | ✓ | | |
| | 9 | Srikantha Lathursha | ✓ | | |
| Speech | 6 | Pushpakaran Tiluxiga | ✓ | | |
| | 6 | Sithamparanathan Vithusiga | | | ✓ |
| | 7 | Thayaparan Thanura | | ✓ | |
| | 7 | Mathivathanan Priyankatharsini | ✓ | | |
| | 8 | Poobalasingam Nirusha | ✓ | | |
| | 8 | Rasenthiran Kobika | | ✓ | |
| | 9 | Donald Thusitha | ✓ | | |
| Dictation | 9 | S.Keerthika | ✓ | | |

**Competitions Conducted by Divisional Secretariat – Point Pedro**

### Children's Day

| Event | Age Group | Name of Student | Place |
|---|---|---|---|
| Speech | Gr 7, 8 | Rajeswaran Sujani | Second |
| Essay | Gr 12, 13 | Kopinath Majuri | Second |

### Elders' Day

| Event | Age Group | Name of Student | Place |
|---|---|---|---|
| Speech | Gr 6, 7, 8 | Jeyaraya Sharmini | Second |
| Essay | Gr 12, 13 | Navaneethan Suganya | First |

### Differently abled Day

| Event | Age Group | Name of Student | Place |
|---|---|---|---|
| Speech | Gr 6, 7, 8 | Kamaleswaran Arthika | Second |
| Poem | Gr 9, 10, 11 | Pirapakaran Abinaya | First |
| Essay | Gr 12, 13 | Suthakar Thushanthy | First |

### World Habitat day – 2014

**Essay Competition – National Level**

1. Venukobalavanithasan Kobika — First Place
2. Rathakrishnan Kokilavathana — Consolation Prize

### State Dramatic Dance Vizha 2014

**National Level**

Makelchikuriya Dance — 3rd Place

Oyiladdam Dance — 2nd Place

### International Moral Institution Competition - 2014

| | | | |
|---|---|---|---|
| Speech | Sivapalan Vaishnavi | Grade 9 | First |
| Speech | Rajeswaran Sujani | Grade 7 | First |
| Speech | Suthakar Thushanthy | Grade 13 | First |

# Memorial Prizes - 2015

1. **Rose Mary Chinnaiah Memorial Prize** for the best performer in Maths Stream is awarded to Jaseetha Satkurunathan donated by OGA Canada.

2. **Thevamalar Ariaratnam Memorial Prize** (Maths Stream) is awarded to Thagsha Thevarajah donated by OGA Canada

3. **R.J.Mann Memorial Prize** for the best performer in Commerce Stream is awarded to Iswarya Sabanathasarma donated by OGA Canada

4. **Manoranchitham Arumugam Memorial Prize** for the best performer in Arts Stream is awarded to Karunya Navanesan donated by OGA Canada

5. **Thevamalar Ariyaratnam Memorial Prize** is awarded to Kobika Kumaresan donated by OGA Colombo

6. **Pakiyaluxmy Sabapathy Memorial Prize** is awarded to Sajitha Selvalingam donated by Mr. Sam Jeyachelvan in memory of his mother who was one of the three students obtained the University entrance the very first time from our school and also a former teacher of J/ Methodist Girls' High School.

7. **Padminidevi Rajendran Memorial Prize** (Arts Stream) is awarded to Karunya Navanesan donated by Mrs. Jeyathevi Nagendran

8. **Mary Chinniah Memorial Prize** for the best performer in science is awarded to Akalya Vaithilingam donated by Miss.Thilagavathi Periathamby

9. **Nesaratnam Subramaniam Memorial Prize** for the best performer in Mathematics is awarded to Jaseetha Satkurunathan donated by Miss.Thilagavathi Periathamby

10. **Gunamanidevi Rajaratnam Memorial Prize** for the best performer in Christianity is awarded to Mary Concepta Kamalathas donated by Mr.J.S.Rajaratnam

11. **Gowry Chandralingam Memorial Prize** for the best performer in Commerce (O/L) is awarded to Sangavi Thesomayananthan donated by Teachers' Guild

12. **Puvaneswary Vanniasingam Memorial Prize** for the best performer in Dance in A/L is awarded to Vaishnavi Pakeerathasharma donated by Teachers' Guild

13. **Indra Krishnakumar Memorial Prize** for the best performer in Logic is awarded to Karunya Navanesan donated by Teachers' Guild

14. **C.A.Thevachchandran Memorial Prize** for the Best performer in Commerce is awarded to Iswarya Sabanathasharma donated by Mrs.M.Yogendran

15. **Mrs.V.Rathakrishnan Memorial Prize** for the Best performance in G.C.E (O/L) Examination 2014 is donated by Mrs.S.Rajendran - awarded to Thushyanthy Kuganathan, Sangavi Thesomayanantham, Sinthuja Sivabalan & Thusitha Ponnuthurai.

16. **Mr&Mrs.Johnpillai Memorial Prize** is awarded to under 15 Kabady Team which won the 3rd place in the National level competition donated by Miss. Nera Johnpillai

17. **Mr& Mrs. Paramalingam Memorial Prize** (Science stream) is awarded to Abinaya Shanmugeswaran donated by Mrs.S.Suntharesan.

## Scholarships

18. **Indrani Baskaran Scholarship** for the best performer in science is awarded to Akalya Vaithilingam.

19. **OGA Colombo Scholarship** for the best performer in Maths is awarded to Jaseetha Satkurunathan.

20. **Thanaluxmy Velluppillai Scholarship** - awarded to

| | |
|---|---|
| Gr 7 | Inthusha Kamalaths |
| Gr 8 | Devinshiya Yogarasa |
| Gr 9 | Kansa Ramakrishnan |
| Gr. 10 | Pruntha Vigneswaran |
| Gr 11 | Thanuja Murugathas |
| Gr 12 | Nivethiga Ragavan |
| Gr. 13 | Jeyaseela Jeyasankar |

21. **Vasuki Aravinthan Scholarship** - awarded to Janani Thirumal, Keerthiga Arasaratnam, Gobika Kumaresan, Karunya Navanesan & Elilarasi Kunarajasingam

22. **Leelawathi Chandrasegaran Scholarship**
    i. All-rounder in G.C.E (O/L) is awarded to Mathumai Kumukkesan
    ii. All-rounder in G.C.E (A/L) Science is awarded to Eluxana Baskaran
    iii. All-rounder in G.C.E (A/L) Arts is awarded to Kohilavathana Rathakirshnanan

# Details on Donors 2014/2015

01. Mr.V.K.Arambamoorthy
02. Mrs.G.Jeyadevi
03. Miss.Ryshalini Alexpaul
04. Miss.Kugarega Kugan
05. Miss.Luxshana Kamalanathan
06. Mrs.Abirami Jeyakanthan
07. Mr.V.Krishnasingam
08. Mr.A.Raja Aravinthan
09. Miss.Yogarajah Yokini
10. Miss.Yogarajah Yokananthi
11. Sellamuththu Textiles
12. City Bakery
13. Manikkappillaiyar Stores
14. S.P.M Printers.